DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 271/2022 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | P.W. 1 |

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : மதியழகன் | தொழில் | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | ஜாதி | |
| கிராமம் | : | இனம் | |
| தாலூக்கா | : | வயது | |
| Mail ID | : | Mobile No. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 27.01.2026.

**எதிரி ஆஜர்**

**311 குவிமுச மனுவின் <u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. சம்பவ ரோடு தென் வடல் ரோடு என்றால் ஆமாம். தார்ரோட்டின் இருபுறமும் மண் ரோடு உள்ளது என்றால் சரிதான். போக்குவரத்து மிகுந்த ரோடு என்றால் சரிதான். புகார் மற்றும போலிசார் விசாரணையில் நீங்களும் உங்கள் நண்பரும் எந்த டீக்கடையில டீ அருந்துவதாக சொல்லவில்லை என்றால் ஆமாம். சம்பவ நடந்த இடத்தில் உங்கள தோட்டம் எத்தனை கிமீ துாரத்தில் உள்ளது என்றால் சுமார் 2 கிமீ துாரத்தில் உள்ளது. உங்கள் அப்பா தினமும் தோட்டத்திற்கு வந்து காலையும் மாலையும் கறந்துகொண்டு சொசைட்டியில் ஊற்றுவது பழக்கம் என்றால் ஆமாம். வண்டியில் தான் சென்று வருவார் என்றால் ஆமாம்.
2. சம்பவ நடந்த இடத்திலிருந்து அருளானந்தம் என்பது வீடு எவ்வளவு துாரத்தில் உள்ளது என்றால் ரோட்டிற்கு மேற்புறம் சுமார் 100 மீட்டர் துார்த்திற்குள் உள்ளது. உங்களது தந்தையாருக்கு ஓட்டுனர் உரிமம் இல்லை என்றால் உள்ளது. நீங்கள் போலீஸ் விசாரணையில்

அல்லது மோட்டார் வாகன ஆய்வாளரிடம் ஓட்டுனர் உரிமத்தை ஒப்படைத்தீர்களா என்றால் இல்லை. வண்டிக்கு இன்சூரன்ஸ் இல்லை என்றால் உரிமம் இன்சூரன்ஸ் வண்டியில் இருந்தது விபத்திற்கு பின்னிட்டு விபத்தில் தெரியவில்லை என்ன ஆனது என்று தெரியவில்லை மிஸ் ஆகவிட்டது. வாகன ஓட்டுனர் உரிமம் மற்றும் இன்ஷூரன்ஸ் தொலைந்து போனால் டூப்ளிகேட் எடுத்துக் கொடுக்க இயலும் என்றால் சரிதான்.

3. கிழுபுறத்தின் தார் ரோட்டிலிருந்து எவ்வளவு தூரத்தில் தள்ளி மேற்கு புறத்தில் சம்பவம் நடந்தது என்றால் சம்பவம் நடந்தது கீழபுரம்தான். ரோட்டின் மேற்கு எத்தனை அடி தள்ளி நடந்ததாக சொல்ல இயலாது என்றால் நடந்தது என்றால் உங்களால் சொல்ல முடியாது கீழபுரமாக சம்பவம் கீழபுரத்தில் இருந்து மேற்புறம் ரோட்டை கடக்கும் பொழுது தான் நடந்தது . சம்பவம் நடந்த இடத்தில் இருந்து கிழபுறத்திலிந்து தார் ரோடு எத்தனை அடியில் முடிந்தது என்றால் ரோட்டின் தூரம் சரியாக தெரியவில்லை..
4. வடக்கிலிருந்து தெறகு நோக்கி செல்லும் வாகனத்திற்கு இடது ரோடு சரியான பாதை என்றால் சரிதான். உங்களது உங்களது தந்தையார் எங்கிருந்து வாகனத்தை தள்ளிக் கொண்டு வந்தார் என்பதை உறுதியாக சொல்லஇயலாது என்றால் வீட்டிலிருந்து தள்ளி கொண்டு வந்துள்ளார். அருளாந்தம் என்பவரது வீட்டிலிருந்து வண்டியை தள்ளி வந்தது உங்களுக்கு தெரியுமா என்றால் இல்லை.
5. போக்குவரத்து மிகுந்த ரோட்டை கடக்கும் பொழுது இருபுறமும் பார்த்து தான் கடக்க வேண்டும் என்றால் ஆமாம். உடன் அடிபட்ட உடன் சம்பவ இடத்தில் எவ்வளவு நேரம் அங்கு இருந்தீர்கள் என்றால் விபத்து ஆம்புலன்ஸ் வந்து எடுத்துச் செல்லும் வரை அங்கு தான் இருந்தேன். எவ்வளவு நேரம் என்றால் நேரம் கவனிக்கவில்லை.
6. உங்களுக்கு சம்பவம் நடந்த நேரத்தில் எதிரியின் பெயர் தெரியாது என்றால் ஆமாம். எதிரிக்கும் காலில் அடிபட்டு கிழிந்த காயம் இருந்தது என்றால் அதை நான் பார்க்கவில்லை. நீங்கள் உடுமலை ஜிஹெச்க்கு எப்பொழுது சென்றீர்கள் என்றால் உடுமலை ஜிஹெச்க்கு செல்லவில்லை.
7. நீங்கள் தனியார் மருத்துவமனைக்கு தான் சென்றீர்கள் என்றால் வேல் மருத்துவமனைக்கு சென்றோம். எப்பொழுது சென்றீர்கள் என்றால் சம்பவம் நடந்த உடனே ஆம்புலன்ஸ் வரும் நேரம் தான் சென்று விட்டோம். விபத்து நடந்து எவ்வளவு நேரத்தில் போலீசார் வந்தார்கள் என்றால் சம்பவம் நடந்தவுடன் நான் ஆம்புலன்ஸில்

சென்று விட்டேன், போலீசார் எப்போது வந்தார்கள் என்று தெரியாது. கோவை சிஎம்சி மருத்துவமனைக்கு எப்பொழுது கொண்டு சென்று சேர்த்தீர்கள் என்றால் நேரம் சரியாக நோட் செய்யவில்லை. எத்தனை மணி வரை உங்கள் தகப்பனார் கூட இருந்திர்கள் என்றால் அப்பா மறுநாள் இரவு 9.00 மணிக்கு இறக்கும் வரை அவருடன் இருந்தேன். போஸ்ட்மாடர்ம் செய்யும் வரை நான் என் அப்பாவுடன் இருந்தேன்.

8. போலிசார் சிஎம்சி மருத்துவமனைகது வந்தார்களா என்றால் 21 ம் தேதி காலை போலீசாரை நான் பார்த்தேன். விபத்து நடந்தது பின்னிட்டு 21 ம் தேதி தான் போலிசாரரை பார்த்திர்கள் என்றால் இல்லை நான் வேல் மருத்துவமனையில் முதலுதவியின் போது பார்த்தேன். போலிசாரை வேல் மருத்துவமனையில் விபத்து நடந்த தினத்தில் பார்த்திர்கள் என்றால் ஆமாம். அப்போது நடந்த விவரங்களை போலிசாரிடம் சொன்னிர்கள் என்றால் இல்லை .
9. பிரேத பரிசோதனை செய்யும் போது தான் மற்ற விவரங்களை போலிசாரிடம் சொன்னிர்கள் என்றால் 20 ம் தேதி புகார் கொடுக்கும் போது சொன்னேன். போலிசார் விபத்து பற்றி எப்போது எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் விபத்து நடந்து போது விசாரித்தார்கள், எந்த இடம் என்று சரியாக ஞாபகம் இல்லை. வேல் மருத்துவமனையிலிருந்து கோவை சென்று பின்னிட்டு பிரேத பரிசோதனை செய்யும் வரை நீங்கள உடுமலை வரவில்லை என்றால் சரிதான்.
10. உங்களை எத்தனை முறை போலிசார் விசாரித்தார்கள் என்றால் ஞாபகம்இல்லை. சம்பவ தேதி யின் போது உங்கள் அப்பா மது அருந்தியிருந்தார் என்றால் இல்லை அவருக்கு மது அருந்தும் பழக்கம் இல்லை. உங்கள் அப்பா அவரது இரு சக்கர வாகனத்தை அஜாக்கிரதையாகவும் கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து ரோட்டை குறுககாக கடந்து விபத்தை ஏற்படுத்தி கொண்டார் என்றால் சரியல்ல. அவருக்கு ஓட்டுனர் உரிமம்இல்லாத காரணத்தால் அவர் வாகனத்தை ஓட்டி வந்ததை மறைத்து தள்ளி வந்ததாக சொல்லியுள்ளிர்கள் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T.Nithyakala B.Com.,B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.